[17th July 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுவும் ஒரு ஆலோசனை. இதைக்குறித்து விவரமாக சர்க்காருக்கு எழுதி அனுப்பினுல், அரசாங்கம் பரிசீலனை செய்யலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : “ அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது ” என்று நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அணு சம்பந்தப்பட்ட சுவடிகள் சரஸ்வதி மஹாலில் இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எனக்கு இன்னும் அந்த நிபுணத்துவம் ஏற்படவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் அது ஒரு ஆராய்ச்சி நிலையம் அல்ல, அங்கே நூல்களை வெளியிடத்தான் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்” என்று சொல்லுவார்கள். இதற்கு சிறந்த அறிவாளிகள் வேண்டும். ரூபாய் 150 சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ரூபாய் 150-க்கு ஒரு பெரிய பேராசிரியரைப் போட முடியாது. அதிகச் சம்பளத்தைக் கொடுத்து, ஒரு பெரிய பேராசிரியரைப் போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யூனியன் சர்க்கார் கொடுக்கிற ஸ்காலர்ஷிப், சங்கீத நாடக சபை கொடுக்கிற ஸ்காலர்ஷிப் ஆனதால், இது அவர்களுடைய பொறுப்பு. இந்த சர்க்காருடைய பொறுப்பல்ல. அதனால் இதைப் பற்றி சர்க்கார் முடிவு சொல்ல இயலவில்லை.

பிராந்திய பொறியியல் கல்லூரி, திருச்சி

* 505 கேள்வி.—திரு. பி. முருகையன் :
திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் மத்திய சர்க்காரால் துவங்கப்பட இருக்கும் பிராந்திய பொறியியல் கல்லூரியில் நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எத்தனை இடம் ஒதுக்கப்படும் ; மாவட்ட வாரியாக ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sixty seats were allotted to students from Madras State.

திரு. கே. ஏ. மதியழகன் : வருகிற ஆண்டிலாவது, இந்த மாநிலத்திலே இந்தக் கல்லூரி அமைந்திருப்பதை மேற்கொண்டு, இந்த மாநிலத்திற்கு அதிக இடங்கள் ஒதுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரீஜனல் என்ஜினியரிங் காலேஜ் அமைக்கிறபொழுது, மத்திய சர்க்காருக்கும், ராஜ்ய சர்க்காருக்கும் சில நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

17th July 1964]

அதன்படி 50 சதவிகிதம் அதிலே இருக்கிற இடங்களை சென்னை ராஜ்யத்தில் இருக்கிற மாணவர்களுக்கும் எஞ்சியிருக்கிற 50 சதவிகித இடங்களை மற்ற ராஜ்யங்களிலுள்ள மாணவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதேபோல்தான் இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள ரீஜினல் எஞ்சினீயரிங் காலேஜ்களில் இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறது. எந்த இடத்திலே வைத்தாலும், சம்பந்தப்பட்ட ராஜ்யத்திற்கு 50 சதவிகிதம் என்றும், மற்ற ராஜ்யங்களுக்கு 50 சதவிகிதம் என்றும் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதை மாற்ற இயலாது.

திரு. கோ. சி. மணி: மொத்த இடங்கள் எத்தனை? அதில் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கியிருக்கிற இடங்களை மாவட்ட ரீதியாக பிரித்துக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த ஆண்டுக்கு ஒதுக்கிய 120 இடங்களில், 60 சென்னை ராஜ்யத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவாரியாகவோ அல்லது வேறு எந்த முறையிலும் அது ஒதுக்கப்படவில்லை. மார்க்குகள் அடிப்படையில்தான் ஸீட்டுகள் வழங்கப்படுகின்றன.

திரு. எம். வி. கரிவேங்கடம்: மற்ற பொறியில் கல்லூரிகளில் மாவட்ட வாரியாக இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதேபோல் இந்தக் கல்லூரியிலும் இடங்களை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமாக ஒதுக்கக் கூடாது. 'எஃபிசியன்சி, எபிலிட்டி' இதையெல்லாம் வைத்துத் தான் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்த ரீஜினல் எஞ்சினீயரிங் கல்லூரிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் இடங்களும் இங்கே கொடுக்கப்படுகின்றன.

திருமதி சி. குழந்தையம்மாள்: இந்த எஞ்சினீயரிங் கல்லூரியில் பெண்களுக்காகக் கொடுக்கப்படும் இடங்களைப் பொறுத்தவரையில் இரண்டு பெண்கள் சேர்ந்து படித்தால்தான் கொடுக்கமுடியும் என்று சொன்னபொழுது ஒரு பெண்ணுக்கு மாத்திரம் இடம் கிடைத்து, இரண்டாவது பெண்ணுக்கு இடம் கிடைக்காத காரணத்தால் ஏற்கனவே இடம் கிடைத்த பெண்ணும் அந்த இடத்தை விட்டுக்கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே அதனை மாற்றியமைத்து அந்தப் பெண் சேருவதற்கு அனுமதியளிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எனக்கு அந்த விவரம் தெரியாது. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ரீஜனல் இன்ஜினீரிங் கல்லூரிக்கும் நமது மாநிலத்திலுள்ள மற்ற கல்லூரிகளுக்கும் படிப்பிலோ தரத்திலோ வித்தியாசம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: படிப்பிலே எந்தப் பெரிய வித்தியாசமும் கிடையாது. செலக்ஷனிலேதான் வித்தியாசம் இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: திருச்சியிலே அமைக்கப்பட்டுள்ள பொறியியல் கல்லூரிக்கு விண்ணப்பங்கள் தனியாகக் கோரப்படுகின்றனவா? அல்லது, எல்லாக் கல்லூரிகளுக்கும் சேர்த்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவற்றிலிருந்து பிரித்து ஒதுக்கப்படுகின்றனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த ஆண்டு ரீஜினல் இன்ஜினீரிங் கல்லூரிக்குத் தனியாகவும் மற்ற எல்லா இராஜ்யங்களிலே இருக்கும் கல்லூரிகளுக்குத் தனியாகவும் விண்ணப்பம் கோரப்பட்டது. ஆனால் ரீஜனல் இன்ஜினீரிங் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பெயர்களை மற்ற இராஜ்யக் கல்லூரிகளிலிருந்து எடுத்துவிட்டுத் தேர்வு செய்யப்பட்டது. ஒருவரையே இரண்டு இடங்களிலும் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பதற்காக இந்த விதமாகத் தேர்வு செய்யப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன்: ரீஜினல் பொறியியற் கல்லூரிகளில் மாவட்டவாரியாக இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தும், இந்தக் கல்லூரியில் மட்டும் தகுதி, திறமையின் அடிப்படையில்தான் இடங்கள் ஒதுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால், நாம் நமது மாநிலப் பொறியியற் கல்லூரிகளுக்கு மேற்கொண்டிருக்கும் முறை தவறானது என்று கருதுகிறார்களா? அல்லது அந்த முறை முரண்பாடானது என்று கருதுகிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த விதமான பொருள் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. இரண்டு கொள்கைகளும் ஒன்றோடொன்று ஒத்துப்போக கூடியவைதான். சில கல்லூரிகளிலே மார்க்குகளைப் பார்த்துத் தகுதியின் அடிப்படையில் நாம் கொடுப்பதும், ஜில்லாவாரியாகச் செய்யவேண்டிய உதவிகளுக்காகச் சில கல்லூரிகளில் அந்த விதமான பாகுபாடு செய்துகொடுப்பதும் மிகவும் பொருத்தமானவையே.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, 'மாவட்டவாரியாகக் கொடுக்கப்படவில்லை' என்று சொன்னார்கள். அப்படியென்றால், பின்தங்கிய மாணவர்கள், மிகப் பிற்பட்டவர்கள் என்று வகுப்புவாரியாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ரீஜனல் இன்ஜினீரிங் கல்லூரிகளில் நமது கான்ஸ்டிட்யூஷன்படிக் கொடுக்கவேண்டிய அளவுக்கு ரிசர்வேஷன் செய்யப்பட்டது. அதற்குமேல் ஒன்றும் செய்யவில்லை.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, கேரள மாநில மாணவர்களுக்கென ஏதாவது இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால், எத்தனை மாணவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

17th July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 'இதர ராஜ்யங்களிலே இருக்கும் மாணவர்களுக்கு' என்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாக ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒதுக்குவது இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: 90 பவுண்டு எடைக்கும் குறைவாக உள்ள மாணவர்களுக்கு இன்ஜினீரிங் கல்லூரிகளிலே இடம் கிடையாது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அம்மாதிரி ஏதாவது விண்ணப்பங்கள் இந்தப் பிராந்திய இன்ஜினீரிங் கல்லூரியில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியென்றால், ஏன் அதை முதலிலே அறிவித்திருக்கக் கூடாது? முதலிலே அறிவித்திருந்தால், மாணவர்கள் இன்டர்வ்யூவிற்கு வருவதற்கான செலவு முதலியன செய்துகொண்டு வந்திருக்க மாட்டார்கள் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது அப்ளிகேஷன் பாரத்திலேயே இருக்கிறது. எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததே. கடைசியாகவோ, புதிதாகவோ இந்த விதி போடப்படவில்லை. பல இன்ஜினீரிங் கல்லூரிகளுக்கு வரும் மாணவர்கள் அந்த மெஷினை விடக் குள்ளமாக இருக்கும் காரணத்தால் அவர்களால் சரியாக அதைச் சரிபார்க்க முடியவில்லை என்றுகூடப் புகார் எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. 90 பவுண்டு எடை இல்லாத மாணவர்கள் எந்தக் கல்லூரியிலும் சேர்க்கப்படவில்லை.

Grants to Panchayat Unions

* 507 Q.—Sri G. RAJARAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the basis on which classification of blocks are fixed for the purposes of payment of grants to Panchayat Unions;

(b) whether there is any proposal to reorganise the existing system to classification of blocks; and

(c) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) தற்போதுள்ள வட்டாரங்களின் தாற்காலிகத்தரப் பிரிவினையானது நபர்வாரி கிராம நிலவரியின் அடிப்படையிலேயே முக்கியமாய் நிச்சயிக்கப்பட்டது. இது (பஞ்சாயத்து நகரங்கள் நீங்கலாக) ஒவ்வொரு வட்டாரத்திற்கான நிலவரிக் கோரிக்கை தொகையை அந்த வட்டார மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் கிடைக்கிறது. ஆனால் இந்த முறையில் சில குறைகள் இருப்பதாகத் தெரிந்ததால், அதையே கண்டிப்பாக அனுசரிக்கவில்லை. உதாரணமாக, அதிக நிதி வசதி திரட்டக்கூடிய ஒரு வட்டாரம் தரப் பிரிவினையில் தாழ்ந்தும், அதிக நிதிவசதி திரட்ட முடியாத நிலையிலுள்ள ஒரு வட்டாரம் தரப் பிரிவினையில் உயர்ந்தும் இருப்பதாக அந்த வட்டார நிலைமைகளை நன்குணர்ந்தவர்கள் கருதுகின்றனர். இந்த விஷயத்தையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திலும் ஒவ்வொரு தரப்பிரிவினையிலும் உள்ள வட்டாரங்களின் எண்ணிக்கையை அரசாங்கம் நிச்சயித்துள்ளது.